RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s217

# குறுந்தொகை மக்களின் வாழ்வியல்

அ. ஜனார்த்தலி பேகம் [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி, திருச்சி-620020 தமிழ்நாடு, இந்தியா.

# Life of Kurundogai People

A. Janarthali Begam [a, *]

[a] Department of Tamil, Jamal Mohamed College, Trichy-620020, Tamil Nadu, India

* Corresponding Author: janaameera1985@gmail.com

Received: 13-08-2022
Revised: 05-10-2022
Accepted: 08-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Sangam people followed many norms in their life. They changed their life style according to the five types of landforms. Their lives were mixed with both happiness and suffering. The husband and the wife used to perform hospitality together and they do not do hospitality alone. The article details the lives of the Kurunthogai people who lived on the right path, about their virtues, love life, sacrifices and their helping mentality.

**Keywords:** Hospitality, Ascetic, Paddy, Charity, Philanthropy, Virtue

## முன்னுரை

சங்க அக இலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகையில் வாழ்ந்த மக்களின் வாழ்வானது நல்ல அமைப்பு முறையில் செயல்பட்டு வந்தது. அவர்களது வாழ்க்கையில் முக்கிய சிறந்த பண்பாக விருந்தோம்பல் பண்பு இருந்து வந்துள்ளது. தன்னை நாடி வருபவர்களை அழைத்து விருந்தளிக்கும் தன்மையல்லாது. அக்காலத்தில் தமது வீட்டின் முன்புறம் திண்ணை அமைத்து அதில் வந்து தங்கும் வழிப்போக்கர்களுக்கும் உணவளிக்கும் சிறந்த பண்பாட்டை மேற்கொண்டிருந்தனர். வறுமையிலும் சிறந்த வாழ்க்கையே வாழ்ந்துள்ளனர். அறவழியில் பொருளீட்டி அதன் வழியில் வாழ்ந்து வந்தனர். பழிக்கு நாணி நடக்கும் பண்பும் அவர்களிடையே காணப்பட்டது. பிறர்க்கு கொடுத்து அதில் அவர்கள் பெறும் மகிழ்வைக் கண்டு இன்புற்று வாழ்ந்தவர்களே சங்ககால மக்களாவர்.

## விருந்தோம்பல் பண்பு

இல்லறக் கடமைகளுள் மிக முக்கியமான ஒரு பண்பாக விருந்தோம்பலைச் சங்கத் தமிழர் கருதினர். இதனை, "இல்வாழ்க்கை நடத்தும் கணவனும் மனைவியும் தம் உற்றார் உறவினரைக் காக்கக் கடமைப்பட்டவர்கள். அத்துடன் நில்லாது தம் இல்லம் நாடி வரும் பிறரையும் உண்டியாலும் உறையுளாலும் உபசரித்தல் அவர்தம் கடமை என்று அறநூல்கள் பகர்கின்றன" (Rajamanikanar, 2009).

இல்லற வாழ்க்கையின் முதன்மை நோக்கமாக விருந்தோம்பல் கருதப்பட்டது. தலைவிக்குரிய பண்புகளைக் கூறும் தொல்காப்பியர் விருந்து புறந்தருதலையும் சுற்றம் ஓம்புதலையும் கூறுகின்றார்.

சங்க இலக்கியத்தில் பிறர்க்கு உதவுதல் பொருட்டும் விருந்தினரை உபசரிக்கும் பொருட்டும் பொருளீட்டுவதற்காகத் தலைவியைத் தலைவன் பிரிந்து செல்கிறான் என்ற செய்தியை விருந்தோம்பல்

என்பது கணவனுடன் கூடி வாழும் மங்கல மகளிர்க்குரிய தனி உரிமையாகக் கருதப்பட்டது. இதனைக் கணவனை இழந்தவர்களும் பிரிந்து வாழ்பவர்களும் விருந்தினை உபசரிக்கும் உரிமை பெறவில்லை என்ற சான்று மெய்ப்பிக்கின்றது. மேலும் இப்பணியினைக்,

"கணவன் அல்லது மனைவி மட்டுமே விரும்பினால் இயலாது. இருவரும் ஒருவர் மாறுபடினும் விருந்தோம்பலைச் சிறப்பாகச் செய்ய முடியாது. விருந்து போற்றும் கணவனும் மனைவியும் ஒத்த உணர்ச்சி உடையராயிருத்தல் இன்றியமையாதது. இவ்வாறு இருந்தால் விருந்து நடைபெறும் இல்லத்தில் உள்ள கணவனும் மனைவியும் மனம் ஒத்து வாழ்கின்றனர் என்பது கருத்தாகும். அதாவது அவர்களது இல்வாழ்க்கைச் செம்மையுற நடைபெறுகிறது என்பது பொருளாகும்" என்று குறிப்பிடுகிறார் (Ramakritinan, 2012).

விருந்தோம்பல் தமிழர்களின் தலைசிறந்த நாகரிகப் பண்பாடுகளுள் ஒன்று. தம் இல்லறத்திற்கு வந்த விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உணவு கொடுத்து இல்லத்திலேயே இருக்கச் செய்து உபசரித்து அன்பு பாராட்டுவது விருந்தோம்பல் ஆகும். விருந்தோம்பல் பற்றிய விரிவான செய்திகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.

விருந்து என்பது மிகச்சிறந்த, மிக விலை உயர்ந்த, பலவாகிய, சிறப்புணவு என்றும் விருந்தினர் என்போர் நமக்கு மிக நெருங்கிய உறவினர்கள் அல்லது மிகவும் வேண்டிய நண்பர்கள் என்றும் இன்று கொள்ளப்படுகிறது. ஆனால் மிகவும் எளிய உணவாயினும் அன்போடு கொடுத்துப் புதியவர் எவர் வரினும் உதவிகள் செய்து உணவிட்டுப் பேணுவது விருந்து என்று பழந்தமிழகம் கொண்டிருந்தது. இந்தக்கருத்தின் அடிப்படையில் தான் சங்க இலக்கியங்களில் வரும் விருந்தோம்பல் பற்றிய செய்திகளும் அமைந்திருக்கின்றன.

பண்டமாற்று முறை வழக்கிலிருந்த அக்காலத்தில் போக்குவரத்து வசதிகளும் இல்லாத சூழ்நிலை நிலவியது. எனவே இரவலர்கள் மட்டுமின்றி ஏனையோரும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கால்நடையாகவே நடந்து செல்ல வேண்டியிருந்தது. உணவு விடுதிகளும் இல்லாத காரணத்தால் உண்டிக்கும் உறையுளுக்கும் அனைவரும் செல்லும் ஊர்களையே நம்ப வேண்டியிருந்தது. ஆகவே புதிதாக வருவோர்க்குப் பசிக்கு உணவளிக்க வேண்டிய நிலை இருந்தமையான் விருந்தோம்பும் பண்பாடு தமிழகத்தில் தோன்றிற்று எனலாம். தொல்காப்பியர் காலத்திலேயே போற்றப் பெற்றது என்பதைப் பின்வரும் பாடல் வழி அறியலாம்.

"புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப்

பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்

வேளா ளெதிரும் விருந்தின் கண்ணும்" என்று களவியலும்"

"விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்"

என்று கற்பியலிலும் இடம்பெற்றுள்ள நூற்பாக்களால் அறியலாம் (Ilampuranar, 2005). இதனால் பகற்குறி, இரவுக்குறி நடைபெறும் இடங்களாக விருந்தோம்பலும் கூறப்பட்டுள்ளது. அதாவது புகுதற்குத் தகுதியில்லாத காலத்துக்கண் அகம்பக்கெதிர்பட்டுழி அவரால் நீக்கப்படாத விருந்தின் பகுதியனவாகிய வழி கூற்று நிகழ்வதாக உரையாசிரியர்கள் பொருளுரைக்கின்றனர்.

தலைவன் வினைமுடித்து வந்த காலத்து விருந்தினரோடு கூட மற்ற நல்லனவற்றையும் தலைவி விரும்புகிறாள். இதனால் பழந்தமிழரின் வாழ்க்கை இலக்கணம் நுவலும் தொல்காப்பியத்தில் விருந்தோம்பலும் இலக்கணங்களுள் ஒன்றாகக் குறிக்கப்படுதலை அறியலாம்.

"விருந்து என்னும் சொல்லுக்குப் புதுமை என்பதே பொருள். எனவே முற்றிலும் புதியவராகத் தம்மிடம் வந்தோரைப் பேணுதலையே விருந்தோம்பல் என்று தமிழர்கருதினர்" என்று கூறுகிறார் (Varadarasan, 2012). தொல்காப்பியர் தலைமக்களின் பண்புகளைக் குறிப்பிட வந்தவிடத்து,

"விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்னகிழவோள் மாண்புகள்"

என்று விருந்து போற்றும் விருப்பப் பண்பினைப் போற்றி இருப்பதைக் காணலாம் (Varadarasan, 2012).

திருவள்ளுவர் ‘விருந்தோம்புதல்’ என்றோர் அதிகாரத்தினை அறத்துப்பாலில் அமைத்திருக்கும் திறம், பண்டைத்தமிழர் தம் வாழ்வில் விருந்தோம்புதல் பெற்றிருந்த இடத்தினை எடுத்துக்காட்டும். இதனை,

“செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானத் தவர்க்கு”

என்ற திருக்குறள் விருந்தோம்பல் சிறப்பினை நன்கு எடுத்துக்காட்டுகிறது (Perunchithiranar, 1997).

“மோப்ப குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து”

மெல்லிய தன்மையுடைய அனிச்ச மலரானது முகர்ந்து பார்த்தாலே வாடிவிடும். ஆனால் மனத்தின் வெறுப்பை, உணர்வுகளை வெளிப்படுத்தும் முகவேறுபாட்டைப் பார்த்த அளவிலேயே விருந்தினர் முகம் வாடிவிடும் என்று திருவள்ளுவர் கூறுகிறார் (Perunchithiranar, 1997).

இல்லற மகளிரின் இன்றையமையாப் பண்புகளுள் ஒன்று விருந்தோம்பல், பெண்ணின் இலக்கணம் கூறும் தொல்காப்பியர் இல்லறத் தலைவியின் கடமைகளைக் கூறும் போது, விருந்தோம்பல் பண்பாட்டையும் இணைத்து,

“கற்பும்காமமும் நற்பால் ஒழுக்கமும்

மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்

விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோள்மாண்புகள்”

என்று விருந்து போற்றும் விருப்பப்பண்பினைப் போற்றியிருப்பதைக் காணலாம். விருந்து புரப்பவன் வாழ்க்கையில் துன்பம் வராது என்றும், விருந்து புரப்பதால் அவன் இல்லத்தில் பொருள் குறைவு ஏற்படாது என்றும் மாறாக உள்ளம் நிறையும் என்றும் வள்ளுவர் கூறுகிறார் (Rajamanikanar, 2009).

“வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை

பருவந்து பாழ்படுத லன்று”

என வரும் குறட்பாக்கள் இவற்றை வலியுறுத்துகின்றன (Perunchithiranar, 1997).

## விருந்தோம்பலில் திண்ணை

பழங்காலத்தில் வீட்டின் முன்புறம் திண்ணைகள் அமைக்கப்பட்டு இருந்தன. இத்திண்ணைகள் நாடோடிகள், வழிப்போக்கர்கள், துறவிகள் தங்குவதற்காக அமைக்கப்பட்டன என்பது புலப்படுகின்றது. இரவு நேரங்களில் இத்திண்ணைகளில் வந்து தங்குவோர்க்கும், சங்ககால மக்கள் உணவு படைத்தது தெரியவருகின்றது. பழந்தமிழர்கள் இரவு நேரங்களில் உறங்கச் செல்வதற்கு முன்பு தமது இல்லத்துத் திண்ணையில் யாரும் விருந்தினர்கள் தங்கியிருக்கிறார்களா என்று பார்த்து தெளிந்த பின்னரே கதவடைப்பது வழக்கமாக இருந்திருக்கிறது. இக்கருத்தினை,

“பலர்புகு வாயி லடைக்கக் கடவுநர்

வருவீ ருளீரோ வெளவும்”

என்ற குறுந்தொகைப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன (Saminathayar, 1937). இக்காலத்தில் இப்பண்பாடு வெகுவாக குறைந்து வருகிறது.

## விருந்தோம்பலுக்கு உரியவர்கள்

பழங்காலத்தில் குருகுலக்கல்வி முறை இருந்தது. கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை குறைவாயிருந்த காரணத்தால் கற்பவர்களுக்குப் போதுமான குரு கிடைக்கவில்லை. கல்வியில் ஆசையுள்ள வறியவர்கள் வெளியூர்சென்று இரந்துண்டு கல்வி கற்று வந்தனர். வெளியூரிலிருந்து வந்து படிக்கும் மாணவர்களுக்கு ஊராரும் மனமுவந்து உணவிடுவார்கள். இதனை,

"அன்னாய் இவன்ஓர் இளமா ணாக்கன்

இரந்தூண் நிரம்பா மேனியொடு

விருந்தின் ஊரும் பெருஞ்செம் மலனே"

என்ற குறுந்தொகைப் பாடலடிகள் உணர்த்துகின்றன (Saminathayar, 1937). இப்பாடலின் மூலமாக பண்டைக்கால மாணவர்களின் நிலையை உணரமுடிகிறது. மாணவர்கள் மட்டுமல்லாது அவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர்களும் ஊர்மக்களிடம் உணவு பெற்றே உண்டுள்ளனர். இவற்றின் மூலம் பண்டைக் காலத்தில் கல்வி அமைப்பில் விருந்தோம்பல் பண்பாடு பற்றி அறியமுடிகிறது.

## துறவிகள்

அறிவர் என்னும் பெயருடையவராய்த் துறவிகள் சிலர் சங்ககாலத்தில் இருந்து வந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது. அவர்களுக்கு அந்தணர் வாழும் தெருக்களில் நல்ல வகையில் உணவு கிடைக்கும். பல வீடுகளில் இருந்து வாழ்வதோடு அல்லாமல் சில நாட்களில் ஒரே வீட்டில் வயிறார நல்ல விருந்து கிடைத்தது. பனிக்காலத்தில் பருகுவதற்கு வெந்நீரும் கிடைத்தது என்பதைக் குறுந்தொகைப் பாடல்கள் உணர்த்துகின்றன. இச்செய்திகள் மூலம் இவர்களுக்குப் படைக்கப்பட்ட உணவு இறைநம்பிக்கையில் படைக்கப்பட்டது என்று கூட கூறலாம். இத்துறவிகள் தலைவன் பிரிவால் வாடும் தலைவிகளுக்கு தலைவனின் வருகையைப் பற்றியும் பிற இன்பகரமான செய்திகளைப் பற்றியும் சில வேளைகளில் தலைவியின் மனத்துயரினைப் போக்குவதற்காக அறிவிப்பதும் உண்டு. இதனை,

"ஆசு இல் தெருவில் நாய் இல்வியன்கடைச்

செந்நெல் அமலை வெண்மை வெள் இழுது

ஓர்இல்பிச்சை, ஆர மாந்தி

அல்சிரம்வெய்ய, வெப்பத்தண்ணீர்

சேமச்செப்பில் பெறீஇயரோ நீயே"

என்ற குறுந்தொகைப் பாடல் உணர்த்துகிறது (Saminathayar, 1937). இச்செய்தியானது தற்போதுள்ள குறி சொல்பவர்கள், குறி சொல்வதைப் போன்று அமைந்துள்ளது.

தலைவியை வரைந்து கொண்டு இல்லறம் நடத்திய குறிஞ்சிப் பாட்டுத் தலைவன் அவனிடம் குற்றமில்லாத உயர்ந்த குலத்திற் பிறந்த உயர்ந்தோர் தமது சுற்றத்தோடே விருந்துண்டு மிக்க அடிசிலை நீ இட யான் உண்டது உயர்ந்தது என்று சொல்லி மகிழ்வுறும் தலைவியின் வாழ்க்கையைத் தோழி எண்ணிப் பார்க்கிறாள். இவ்வாறு இருப்பதால் தான் தலைவன் தலைவியின் இல்லறம் சிறக்கிறது என்ற செய்தியை,

"வசையில்வான் றினைப் புரையோர்கடும்பொடு

விருந்துண்டெஞ்சிய மிச்சில் பெருந்தகை

நின்னோ டுண்டலும்புரைவ தென்றாங்

கறம்பூனை யாகத்தேற்றி”

எனும் தோழி கூற்று வாயிலாக உணரலாம் (Parimanam, Balasubramanian, 2010).

நெய்யில் பொரிக்கப்பட்ட காடையுணவுடன் அறுசுவை உணவையும் நற்செய்தியை உரைத்த பணிமகனுக்குப் படைக்க விரும்பும் தலைவியின் விருப்பத்தை,

“நெய்கனி குறும்பூழ் காயமாக

ஆர்பதம் பெறுக தோழியத்தை

பெருங்க னாடன்வரைந்தென வவனெதிர்

நன்றோ மகனே யென்றனென்

நன்றே போலு மென்றுரைத்தோனே”

எனும் குறுந்தொகைப் பாடல் வெளிப்படுத்துகிறது (Saminathayar, 1937). விருந்து வருவதை மிகவும் விரும்பினர் அக்காலப் பெண்டிர்.

“விருந்து விருப்புறூஉம் பெருந்தோட் குறுமகள்”

பகலிலும் மாலையிலும் ஏன் நள்ளிரவிலும் கூட விருந்தினர் வந்தால் அவர்களை மிகுந்த உவப்புடன் ஓம்பினர் (Parimanam, Balasubramanian, 2012).

“மாலை நனி விருந்து அயர்மார்”

என்னும் குறுந்தொகைப் பாடல் விளக்குகிறது (Saminathayar, 1937).

சிலர் அடிக்கடி நாள்தோறும் விருந்தினர் வரினும் அவ்வாறு வருந்தி வரும் புதியவர்களை அவர்கள் மகிழ்வுடன்ஓம்பினர்.

“விருந்து ஒழிவு அறியாப்பெருந்தண் பந்தர்

வருந்தி வருநர் ஓம்பி”

என்ற அகநானூற்று பாடலடிகள் மூலம் உணரமுடிகிறது (Parimanam, Balasubramanian, 2010). வறுமை கருதியோ, வேறு இயலாமை கருதியோ, விருந்தினரை வரவேற்காத அல்லது விருந்துக்கு ஒளிந்து கொள்ளும் இல்லற வாழ்வைப் பண்பாடற்ற வாழ்க்கை என்று இகழ்ந்தனர் என்பதை,

“ஒள்ளிய விருந்து கண்டு ஒளிக்கும்

திருந்தா வாழ்க்கை?”

என்று புறநானூறு கூறுகிறது (Parimanam, Balasubramanian, 2016).

“விருந்தோம்பல் என்னும் பண்பாட்டு வழக்கம், பொது நலவுணர்வின் முதல்படி, உலக உறவுக்கு எடுத்து வைக்கப்பெறும் முதல் அடி. இல்லறம் இதன் நாற்றங்கால், விளை வயல் மனச்செழுமைக்கும் உயிர் உறவாண்மைக்கும், உலக அறிவு விளக்கத்திற்கும் அடிப்படையாக உள்ள மாந்தநேய உறவு விருந்தோம்பலிலேயே தொடங்குகிறது” (Perunchithiranar, 1997). கணவன், மனைவி, மக்கள், உற்றம், சுற்றம் என்று சுழன்று வந்த அன்புணர்வு, இல்லத்தின் வாயிற்படி தாண்டித் தெருவிலிறங்கி வந்து வெளியுலகப் பார்வைக்கு அடி வைக்கும் முன் கொள்ள வேண்டிய முதல்பொதுவுணர்வு. அஃதாவது அறம் விருந்தோம்பல் விருந்தினன் வழியாகத்தான் இல்லற வாழ்வினன் புறவுலகத்தைத் தொட்டுப் பார்க்கின்றான். விருந்தினரே பிறகு நண்பனாகின்றான். துணையாகின்றான். வழிகாட்டியாகின்றான். அறவோனாகின்றான். அன்பு அருளாகி, அறமாகி உலக உறவு தழைக்க மாற்றம் பெறுவது விருந்தோம்பல் ஆகும்.

## வறுமையிலும் வாழ்வியல் நிலைகள்

உலகில் வறுமையுற்றோர்க்கு வளமான வாழ்வு இல்லை. தம்மைச் சூழ்ந்துள்ள சுற்றத்தைப் பாதுகாத்தும் தாம் விரும்புபவர்களோடு கூடி இனிதாக மகிழ்ந்து வாழும் வாழ்க்கை இவர்களுக்கு வாய்ப்பதில்லை. அருளுள்ளம் படைத்தவர்களாயிருந்த போதிலும் பொருளற்ற ஈத்துவக்கும் இன்பம் பெற இயலாது. இல்லோர்க்கு இன்பம் துய்த்தலும் கைகூடுவதில்லை. இளமையில் வறுமை இன்னும் கொடியதாகும் வறியவர்களுடைய இல்வாழ்க்கை யாசிப்பதையும் விட இழிநிலை உடையதாக இருந்துள்ளது.

"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்"

"ஓர்ஆண் வல்சிச் சீர்இல் வாழ்க்கை"

"உள்ளது சிதைப்போர் உளர்எனப் படாஅர்

இல்லின் வாழ்க்கை இரவினும் இளிவெனச்"

எனும் குறுந்தொகைப் பாடல் உணர்த்துகின்றன (Saminathayar, 1937).

"தம்நயந்து உறைவோர்த் தாங்கி தாம்நயந்து

இன்அமர் கேளிரொடு எமுறக் கெழீஇ

நகுதல் ஆற்றார்நல் கூர்ந்தோர்" (Parimanam, Balasubramanian, 2010)

என்ற அகநானூற்றுப் பாடலடிகளும்,

"வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்"

என்ற கலித்தொகைப் பாடலடிகளும் உணர்த்துகின்றன (Parimanam, Balasubramanian, 2012). மேற்கண்ட பாடல்களின் வாயிலாக சங்ககாலத்து மக்களின் வறுமை நிலையையும் அவர்களுக்குரிய இயலாமையையும் அறிகிறோம்.

## அறவழியில் வாழ்க்கை

உயர்ந்தோரின் வாழ்க்கை முறையானது செயல்கள் எப்பொழுதும் அறத்தோடு பொருந்தியதாகவே இருந்துள்ளன. மேலும் அவை சமூகத்தோடு கூடிய மக்களுக்குப் பற்றுக்கோடாகவும் விளங்கியுள்ளதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

"எழில்மிக உடையது ஈங்கு அணிப்படூஉம்

திறவோர் செய்வினை அறவது ஆகும்

கிளை உடை மாந்தர்க்குப் புணையுமார்இவ்"

என்ற குறுந்தொகைப் பாடல் நற்செய்கையினைப் பாராட்டி உரைக்கின்றது (Saminathayar, 1937). எடுத்துக்கொண்ட ஒரு செயலை அறவழியில் நின்று திருத்தமுறை முடிப்பதென்பது யாவர்க்கும் பயன் விளைவிப்பதாகும். இச்செயல் வடிவிலான பயன்பாடுகள் பற்றி பழந்தமிழ் இலக்கியங்களில் மிகச்சிறப்பாக பேசப்படுகின்றன.

"செய்வினை முடித்த செம்மல்உள்ளம்" (Saminathayar, 1937)

"அருந்தொழில் முடித்த செம்மல் உள்ளம்" (Parimanam, Balasubramanian, 2010)

"வினை முடித்தன்ன இனியோள்"

என வரும் பாடலடிகள் வினை முடித்ததால் உண்டாகும் உளப்பண்பை விளக்குகின்றது (Parimanam, Balasubramanian, 2012).

## பழிக்கு நாணும் பண்பு

சங்ககால மக்கள் பழிக்கு அஞ்சி வாழ்க்கை நடத்தியுள்ளனர். இவர்கள் பழிச்செயலுக்குப் பெரிதும் நாணுபவர்தம் புகழை எதிரே பிறர்கூறக் கேட்பினும் கூடப் பெரிதும் நாணத்தை அடைவார்கள், பெருமிதம் கொள்ள மாட்டார்கள். இக்கருத்தினை,

"சான்றோர்

புகழும் முன்னர் நாணுப

பழியாங்கு ஒல்பவோ காணும்காலை"

என்ற குறுந்தொகைப் பாடல் அடிகள் உணர்த்துகின்றன (Saminathayar, 1937). கலித்தொகைப் பாடலிலும்,

"தம்புகழ் கேட்டார் போல்

தலை சரய்த்து மரம்துஞ்ச"

எனக் குறிப்பிடுகிறது (Parimanam, Balasubramanian, 2014). இங்ஙனமாக உலக ஒழுக்கத்தைக் கடந்து தீங்கு செய்பவர்கள் பிறரது பழிப்புக்கு உரியவராகிறார்கள் என்பது புலப்படுகிறது.

## ஈதலும் வாழ்வும்

இல்லத்திற்கு நாள்தோறும் இரவலர் பலர் வந்து உதவி பெற்றுப் போவது பெருமையாகவும், அவர்கள் வராமலிருப்பது வாழ்க்கையின் சிறுமையாகவும் கருதப்பட்டு வந்தன.

உன்னைப் பிரியமாட்டேன் என்று தலைவிக்கு அறிவுறுத்தும் தலைவன் கூறும் உறுதிமொழி (வஞ்சினம்) போல் அமைந்துள்ளது. உன்னை விட்டுப் பிரிந்து வாழ்வேனானால் யான் மேற்கொள்ளும் கடமையுடன் வாழும் வாழ்வில் இரவலர் என்னை விட்டு நீங்கி வராமல் நிற்கும் நாட்கள்பல ஆகுக என்கிறான்.

"இரவலர் வாரா வைகல்

பல ஆகுக யான்செலவு உறுதகவே"

என்கிறது குறுந்தொகை (Saminathayar, 1937). பிறர் துன்பத்திற்கு இளம் மனமுடைய சான்றோர், பொருளைப் பாதுகாவாது தம்மிடமுள்ளதை எல்லோர்க்கும் வழங்கிடும் இயல்புடையவராவர்.

"நல்இசை வேட்ட நயன் உடைநெஞ்சின்

கடப்பாட்டாளன் உடைப்பொருள் போலத்

தங்குதற்கு உரியது அன்று நின்

அம்கலுழ் மேனிப் பாஅய் பசப்பே"

இதிலிருந்து சங்ககால மக்களிடையே இருந்த ஈகைப்பண்பும், இரக்க உணர்வும் வெளிப்படுகின்றது. உயர்ந்த உள்ளம் கொண்ட செல்வக்குடியில் பிறந்தவர்கள் தன்னை நாடி வந்தவர்களுக்கு நீரோடு பொன்னைச் சேர்த்துத் தானமாக வழங்குவார்கள். தானம் கொடுத்து மீதமிருந்தவற்றைத் தான் மட்டும் நுகராமல் யாவருக்கும் விருப்பமோடு கொடுத்தனர் (Saminathayar, 1937).

"கவலை கெண்டிய அகவலாய்ச் சிறுகுழி

கொன்றை ஔவீதாஅய்ச் செல்வர்

பொன்பெய்பேழை முய்திறந்தஅன்ன

வரைகோரள் அறியாச் சொன்றி

நிரைகோல் குறுந்தொடி தந்தை ஊரே”

என்ற குறுந்தொகைப்பாடல்வழி அறியமுடிகிறது (Saminathayar, 1937).

“பதலைப் பாணிப் பரிசிலர் கோமான்”

என்னும் குறுந்தொகைப் பாடலடிகள் மூலம் இரவலர்களுக்கு மனம் உவந்து அவர்களின் துன்பம் நீங்கும் அளவிற்குப் பொருள் கொடுத்து உதவும் மனப்பான்மை சங்ககால மக்களிடையே இருந்தது என்பதை அறியமுடிகிறது (Saminathayar, 1937).

## முடிவுரை

சங்க அக இலக்கியங்களில் பின்பற்றி வந்த ஒழுகலாறுகள் அவர்களுடைய பண்பாடு, பழக்க வழக்கங்கள் எல்லாம் பெருமைக்குரியதாகவே அமைகின்றது. சுற்றம் சூழ விருந்தோம்புதல் என்ற பண்பை கண்டிருக்கிறோம். சுற்றம் தாண்டியும் வருவோர், போவோர், வழிப்போக்கர்கள் என்று அனைவருக்கும் விருந்தளிக்கும் பண்பினை இறைவனுக்குச் செய்யும் தொண்டாக எண்ணி செய்து வந்ததை இதன் வழி அறியமுடிகின்றது. ‘புகழெனின் உயிரும் கொடுக்குவர், பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளார்’ என்ற உயர்ந்த கொள்கையைக் கொண்டு வாழ்ந்து வந்தனர். அறம் செய்தலும், ஈதலும் வாழ்வும் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கு ஒரு அர்த்தமாகத் திகழ்ந்தது என்பது வியப்பான ஒன்றாகும்.

## References

Parimanam Aa.Ma., Balasubramanian Ku.Ve. (2010) Akananooru Source and Text,, New Century Book House, Chennai, India.

Parimanam Aa.Ma., Balasubramanian Ku.Ve. (2012) Natrinai Source and Text, New Century Book House, Chennai, India.

Parimanam Aa.Ma., Balasubramanian Ku.Ve. (2014) Kalithogai Source and Text, New Century Book House, Chennai, India.

Parimanam Aa.Ma., Balasubramanian Ku.Ve. (2016) Purananooru Source and Text, New Century Book House, Chennai, India.

Parimanam Aa.Ma., Balasubramanian Ku.Ve. (2018) Pathuppattu Source and Text, New Century Book House, Chennai, India.

Perunchithiranar, (1997) Tirukkural Mei Porulurai, South Language Publication, Chennai, India.

Rajamanikanar, M. (2009) Pathu Pattu Research, University of Chennai, India.

Ramakritinan, A. (2012) History of Tamil Nadu and Tamil Culture, Sarvodaya Literary Farm, Madurai, India.

Saminathayar Vu. Ve. (1937) Kurundogai, Kabir Press, Chennai, India.

Varadarasan M. (2012) KurunTogai Selvam, Pari Station, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License